மட்டக்களப்பு
சூழல்
விழிப்புணர்வு
மாசிகை

# சூழல்சுடர்

ஆனி - 1993

6

"மன்று, 43 - புகையிரத நிலையக் குறுக்கு வீதி, மட்டக்களப்பு.



மட்டக்களப்பு மாவட்டச் சூழல் மகத்துவம் விளக்க படவும், சூழலிலுண்டாகும் தாக்கங்களை வெளிக் கொணரவும் "சூழல் விழிப்புணர்ச்சி மன்றம்" இவ்விதழை மாதம் ஒரு முறை விரிக்கிறது.

ஜூன் 5 உலக சூழல் தினத்தை முன்னிட்டு விசேட வெளியீடு

## நீரைப்பற்றி நீர் அறிய வேண்டியது

போ. இ. கிறிஸ்ரோபர்

திரவம், திண்மம், வாயு என்ற நிலைகளில் இருக்கும் நீர், பூமியில் வாழும் எல்லா உயிர்களுக்கும் இன்றியமையாத செயல்களைப் புரிகின்றது. பூமியின் சீதோஉஷ்ண அமைப்பில் நீர் மாத்திரம் இம்மூன்று நிலைகளிலும் இருக்கின்றது. 100 செ. வாயுவாகவும், 0 - 100 செ. திரவமாகவும், 0 செ. கீழ் திண்மமாகவும் இருக்கின்றது. நீரின் மாற்று நிலைகள் ஓர் உச்சப்புள்ளியில் ஏற்படக் கூடியதாக இருக்காவிட்டால் உலகில் நீர், வாயுவாகவே இருக்கும். இந்நிலை உயிரினங்களுக்குப் பயனைக் கொடுக்கப்போவதில்லை.



நீர் ஆவியாவதற்கு உச்ச வெப்பநிலை தேவையாதலால், அவ்வெப்பம் முழுவதையும் நீர் அணுக்கள் உறிஞ்சி உள்ளடக்கிய நிலையில் ஆவியாக மாறுகின்றது. அதேபோல், ஆவி மீண்டும் நீர்த்துளிகளாகும் பொழுது, தன்னுள்ளடக்கிய வெப்பத்தை வெளிவிடுகின்றது. நீரின் நிலையில் மாற்றம் ஏற்படும் பொழுது, பூமியில் வெப்பம் பரிமாற்றம் செய்யப்படுகின்றது என்பதை அறியக் கூடியதாக இருக்கின்றது. எமது உடலிலிருந்து வியர்வை ஆவியாக மாறும் பொழுது உடலில் குளிர்மை ஏற்படுவதை உணர்கின்றோம். வெப்பத்தை அதிக அளவில் உறிஞ்சிய பொழுதும் வெப்ப அளவில் அதிகப்படியான மாற்றம் நிகழாமல் நீர் இருப்பதனால், இயந்திரங்களைக் குளிரப்பண்ணுவதற்கு நீர் உபயோகப்படுத்தப்படுகின்றது.

நீர், ஓர் அதிசிறந்த கரைப்பானாகும். இக் குணாதிசயத்தினால், நீர் தாவரங்களில் போசணைக் கரைசல்களை நுண்குழாய்கள் ஊடாக எடுத்துச் செல்கின்றது. சகல கழிவுகளையும் கரையப்பண்ணிச் சுத்தமாக்கும் சிறப்பும் நீரில் உண்டு. இச்சிறப்பு இருப்பதனால் நீர் வெகுவிரைவில் அசுத்தமாகின்றது. இந்நீர் இயற்கையின் நீரியல் முறையில் தூய்மையாகி மீண்டும் பாவனைக்காக உயிரினங்களுக்குக் கிடைக்கின்றது. ஆனாலும் இச்செயல்முறை, ஒழுங்காக நடைபெற வேண்டுமாயின் நீர் மாசுபடுதலில் ஒரு கட்டுப்பாடு பேணப்பட வேண்டும்.

ஆகவே, நம் வாழ்விற்கு மிகவும் அவசியமான நீரைப் பேணிடுவோம்.

ஆதாரம் :- Living in the environment,
G. Tyler Miller JR

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாலமீன்மடு கிராமத்தின் மண் அகழ்வும் சூழலி பாதிப்பும்

முகத்துவாரம் பார்வீதியின் கடைசி எல்லையில் அமைந்துள்ள கிராமம் இதுவாகும். இக்கிராமத்தின் கடல் எல்லைகள் சார்ந்த, புன்னைக்குடா கிராமத்தினைத் தொடர்புபடுத்தி அமைந்துள்ள பாதையருகில் இந்த மண்ணகழ்வு கடந்த 3 வருடங்களுக்கு மேலாக இடம் பெற்று வருகின்றது. இப்பகுதி நகர்ப்புறத்திலிருந்து சுமார் 3 மைல்களுக்குள் அமைந்துள்ளமையால் கூடுதலாக நகர்ப்புறம் சார்ந்த பகுதிகளில் நடைபெறுகின்ற கட்டட ஆக்க வேலைகளுக்காக இந்த மண்ணகழ்வின் அளவு அதிகரித்துக் கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

முகத்துவாரத்திலிருந்து கடற்கரையோரமாக அமைக்கப்பட்டுள்ள வீதியின் இரு மருங்கிலும் ஏறத்தாழ 4அடி ஆழத்திற்கும் மேல் இதுவரை ஆங்காங்கே 5 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலங்களிலிருந்து இந்த மண் அகழ்ந்தெடுக்கப்பட்டுள்ளது. தொடர்ந்து இடம்பெறும் இந்த மண்ணகழ்வினால் பாதையின் இருமருங்கிலும் ஆழமான குழிகள் ஏற்படுவதன் மூலம் மழைக்காலத்தின்போது இப்பாதை மழைநீரால் அரிக்கப்பட்டு வாகனப்போக்குவரத்திற்கு ஏற்றதாக இல்லாமல் போகும் நிலைமை தோன்றுவதோடு, கடல் நீர் அகழிகளாக்கப்பட்டுள்ள இப்பிரதேசத்தின் மூலமாக கிராமத்திற்குள் உட்புகும் சாத்தியமும் காணப்படுகின்றது. அது மட்டுமன்றி நன்னீர் வளங்கள் உப்பு நீராகும் அபாயமும் எதிர்காலத்தில் உருவாகலாம் என அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

மேலே குறிப்பிட்ட இந்த மண்ணகழ்வு விவகாரம் தொடர்பாக பாலமீன்மடு கிராமத்துமக்கள் மட்டத்தில் ஏகாதியாக இந்த மண் எடுக்கும் முயற்சியை மட்டுப்படுத்தல் வேண்டுமென்ற அவா மேலோங்கியுள்ளதோடு அங்கீகாரமற்ற மண் எடுத்தலுக்காக கிராமத்தின் உள்ளூர் கிராம சபைத்தலைவர்களும் மற்றும் நலன் விரும்பிகளும் இந்த முயற்சியை மட்டுப்படுத்தும் பணியில் ஆர்வமாக உள்ளனர்.

நடப்பு வருடத்தில் கடந்த மார்ச் மாதம் 28ஆந் திகதி ஒரு கருத்தரங்கும், இம்மாதம் 5ஆம் திகதி உலக சூழல் தினத்தையொட்டி ஒரு கருத்தரங்கும் மட்டக்களப்பு மாவட்டத்தின் கிராமோதய சபைத்தலைவர்களுக்காக மாவட்ட சூழல் முகவரவையுடன் இணைந்து எமது நிறுவனத்தினால் நடாத்தப்பட்டது.

இம்மாவட்டத்தின் சூழல் பாதுகாப்பு பற்றியும் வளங்கள் அழிக்கப்படுவது தொடர்பாக இவற்றினை மட்டுப்படுத்துவது பற்றியும் ஆராயப்பட்ட மேற்படி கருத்தரங்குகளில் பாலமீன்மடு கிராமோதய சபைத் தலைவரால் இந்த மண் எடுப்பின் பாதிப்பு பற்றியும் இதனை மட்டுப்படுத்துவதற்கான முயற்சிகள் உடனடியாக மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.

இக்கருத்தரங்கிற்கு சமுகமளித்திருந்த வன பரிபாலன உத்தியோகத்தர், நீர்ப்பாசன உதவிப் பணிப்பாளர் மற்றும் விவசாய உத்தியோகத்தர்களின் கவனத்திற்கு இந்த விடயம் எடுக்கப்பட்டதோடு, இந்த மண் எடுத்தல் நடைமுறையை சீரான முகாமைப்படுத்தலின் கீழ்க் கொண்டுவர வேண்டுமெனவும் எமது நிறுவனத்தின் சார்பில் வேண்டுகோள் விடுக்கப்பட்டது. மண் எடுக்கப்படும் பிரதேசத்தின் இப்போதைய நிலைமை பற்றி நேரடியாக எமது நிறுவனத்தினரால் பார்வையிடப்பட்டதோடு கிராமசேவகர் மற்றும் கிராம அபிவிருத்தி சங்கச் செயலாளர், மீன்பிடி சங்கத் தலைவர் ஆகியோரிடம் இந்நிலைமை தொடர்பாக விரிவாக ஆராயப்பட்டது. இம்முயற்சியை மட்டுப்படுத்தும் முதற் கட்ட நடவடிக்கையாக கத் தகுதியான அனுமதிப்பத்திரங்களுக்கு அதில் கோரப்பட்டுள்ள அளவு மண்ணையே எடுப்பதற்கும், மேலதிகமான மண் எடுத்தலை மட்டுப்படுத்துவதற்காகப் பாதையின் குறிப்பிட்ட இடத்தில் மண் ஏற்றிச் செல்லும்

தொடர்ச்சி..9

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைச் சுடர்

## சூழல் காப்போம்

சுத்தத்தை இத்தரையில் பேணுதற்கு
சூழலினைச் செப்பனிட்டுப் பாதுகாத்து
நித்தமொரு பயிர்வளர்த்து நீரிறைத்து
நீள்வெளி தனையமைத்துப் பாதுகாத்துத்
தத்தமது தேவையுற விவசாயத்தைத்
தரணியிலே பயிர்செய்து வாழ்தல்போல
நித்திலத்தில் வேறுபயன் உண்டோசொல்வீர்!
நேரத்தைப் பொன்செய்யச் சூழல்காப்பீர்!

ஞாலத்தில் தாய்நாட்டின் உயர்வொன்றுக்காய்
நற்பணிகள் விளைத்திடுவோம் சேய்கள்கூடி
காலத்தை வென்றிடுவோம் பயிர்வளர்த்து
கடமையிலே நிலையுறுவோம் களையறுத்து
நாளையுக மாற்றத்தை நமதுநாட்டின்
நாற்றிசையும் பரவியெழத் தோள்கொடுப்போம்
வேளையிலே விளைவுறுப்போம் வெற்றிகண்டே
வீறுடனே உழைத்திடுவோம் வாரீரின்றே!

அமெரிக்கா, ரஷ்யாபோல் ஜப்பான்நாடும்
அவுஸ்திரேலியா, சீனா, இங்கிலாந்தும்
இமைப்போதும் உழைக்கின்ற பாகிஸ்தானும்
இன்றுலகில் முன்னேற்றம் கண்டதற்கு
சுமையாகக் கருதாமற் சூழல்காத்துச்
சோர்வின்றி உழைத்ததனால் விவசாயத்தால்
அமைந்ததுவே அங்கெல்லாம் தொழிற்புரட்சி
அஃதேபோலொன்றுபட்டு உழைப்போம் வாரீர்!

ஆக்கம் :- எச். எம். ஜாவித்,
மட்/அலிகார் மத்திய கல்லூரி.

## சூழலைப் பேணிடுவோம்

மனிதனுடைய வாழ்வு
சூழற் சீர்கேடுகளால் - இன்று
கேள்விக் குறியாகிவிட்டது
வாழ்வின் சிகரத்தை
எட்டிப் பிடிக்க வேண்டியவர்கள்
இன்று பாதாளக் குழிக்குள்
தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றனர்
தான் வாழும் சூழலைத்
தானே மாசுபடுத்திக் கொள்வதால்
வீணே வாழ்வை
சிதைத்துக் கொள்கின்றனர்.

இதனால்,
மனிதன் நோய்களின்
வாடிக்கையாளன் ஆகின்றான்
மரணம் அவனது ஆயுளுக்கு
முற்றுப்புள்ளி வைக்கின்றது
ஏனிந்த நிலை எமக்கு
சூழலோடு மனிதவாழ்வு
சங்கமித்துப் போய்விட்டது
என்பதனால்,
அனைவரும் ஓரணி சேர்வோம்
இன்றே,
புதியதோர் உலகைச் சமைத்திடுவோம்
ஆதலால், நாம் வாழும்
சூழலைப் பேணிடுவோம்.

ஆக்கம் :- க. சாந்தினி,
வந்தாறுமூலை மே. கி. அ. ச.

## காப்பது நம் கடமையே

இயற்கையின் வனங்களும்
இன்னுமுள்ள விருட்சமும்
பயப்பது நற்பயனென
யாமுணர்ந்த போதிலும்
வியப்பதில்லை ஏன்வினரே!
இயற்கையின் அழிவினை
துயர் தொடராதிருக்கவே
துரத்துவீர் அழிவினை!

விஞ்ஞானச் சிகரமாம்
விந்தைமிகு நூற்றாண்டு
கண்மூடி நடப்போரும்
கனத்ததும் இங்குதான்
சொர்க்கத்தின் எதிர்வாசல்
சோதனை நகரவாழ்க்கை
குப்பைகள் மலைகளாய்
குவிவதும் காண்பீரே!

காலத்தால் அழிவிலா
கண்கவர் பிளாஸ்டிக்கும்
கோலம் கொண்ட
கொள்ளைப் பொலித்தீனும்
இத்தனையும் எத்தனை
இன்னலைப் பயக்கும்
அத்தனையும் அறிந்தும்
அயர்வதேன் மாந்தரே!

தொடர்ச்சி..4

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிதைச் சுடர் 3ம் பக்கத் தொடர்......

சூழலின் சமநிலை
சுற்றிலே செல்வதால்
நாளெல்லாம் நாமிங்கு
வாழ்வது நிச்சயம்
பாழாக இங்கேதும்
எண்ணாது பார்த்திடின்
சூழாது எம்மையே
தொல்லைதரு நோய்கள்!

மாங்காய் போலத்தோன்றிடும்
மாணிக்கத் தீவிலே
நீங்காத நினைவுகளை
நிறைத்ததெம் சூழலே
தீங்காக இங்கேதும்
புரிந்திடா தொழுகுவீர்
பாங்காகப் பசுமையினைப்
பரிணமிக்க வைத்திடுவீர்!

என்னையென்னைப் பாரென
எழுந்து நிற்கும் தென்னையும்
அன்னைபோற் பனைகளும்
அணிவகுத்த நாளிலம்
மண்ணையெங்கு தோண்டினும்
பொன்கிடைக்கும் பூமியை
கண்ணையிமைக் காப்பதெனக்
காப்பது நம் கடமையே!

ஆக்கம்:- பொ. பேரின்பம், சித்தாண்டி இளைஞர் கழகம்.

---

## வாழிய சூழல் சுடரே

மீன்பாடும் தேன் நாட்டின்
தேனைத் தெவிட்டாத சுவைதரும்
வான் புகழ் ஓங்கும்
சூழல் சுடரே! - நீ
வற்றாத பொக்கிஷம்
உன் சேவை - இந்தப்
பாழாகும்
சூழலுக்குத் தேவை
நீ
எமது மாநகரின்
மீட்பன் அன்றோ!
அதனால்தான்
அணையாது
அனைவராலும் போற்றப்பட்டு
சுடர் விட்டெரிகின்றாய்
உன் சுடரொளி
இருள் படிந்த
சூழல் கடலில்
பயணம் செய்யும்
மானுடக் கப்பலுக்கு
திசைகாட்டி வழிகாட்டும்
கலங்கரை விளக்கம்
சூழல் பூங்காவில் - நீ
புஉதீபிக்கும் புதுமலர் ஒவ்வொன்றும்
அர்த்தமுடையவை
கண்பார்வையற்ற
சூழல் அந்தகனுக்கு - நீ
வெள்ளைப்பிரம்பு
மாசுபட்ட
இந்த
சூழலில் வாழும்
மனித குலத்தைத்
தட்டியெழுப்பி
நல்வழிப்படுத்தும்
விழிப்புணர்ச்சியாளன்
அதுமட்டுமா?
மட்டு மண்ணில்
மறைந்து கிடக்கும்
இளம் எழுத்தாளர்களின்
சிந்தனை ஆக்கங்களை
தாங்கி வலம் வரும்
கலைக் களஞ்சியம்
மாதம் ஒருமுறை
நீ மலர்ந்தாலும்
உன்னிற் பொதிந்துள்ள
அம்சங்களோ
அளப்பெரியன.
அறிவிலிகளின்
அறிவின்மையைப்
போக்கி அறிவூட்டும்
ஆசிரியன் - நீ
என்றென்றும்
மங்காது ஒளிர்வாய்
சூழல் அழியாது
பாதுகாத்திடுவாய்
மனிதரினம் வாழ
உனை அர்ப்பணிக்கும்
சூழல் சுடரே வாழிய நீ
ஆமாம்
வாழிய சூழல் சுடரே!

ஆக்கம்:- த. மதிவண்ணன்,
வந்தாறுமூலை மே.
சி.அ.ச.

---

## சூழல் என் சுகந்தம்

சுத்தம்தான் சுகம் என்பது
பெரியோர் வாக்கு - அதை
நித்தம் நித்தம் போற்றுவது
எனது கடமை.

சுற்றுப்புறத்தை சூழல் என்று
அழைப்பேன் நான் - அதை
சுத்தமாக வைத்துக் கொள்வேன்
நிதமும் நான்.

பற்றி எரியும் தீயைப்போல
மதியம் வெயில் - அதை
நீக்கி நிழலைப்பெறவே நடுவேன்
மரத்தை நான்.

தினமும் சூழலை நான்
காப்பேனாகில் - சூழல்
என் சுகந்தமாக விரைவில்
மாறிடுமே.

ஆக்கம்:- அ. கேதீஸ்வரன்,
மட்/புனித மிக்கேல்
கல்லூரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்றைய பாடம்

## மாம்பழப் பயிர்ச் செய்கை

சென்ற இதழ்த் தொடர்ச்சி.

### பசளைப் பிரயோகம் :-

பசளைப் பிரயோகத்திற்கு நமது மட்டக்களப்பு மாவட்டத்தில் அதிகளவு கவனம் செலுத்தப்படுவதில்லை. ஆயினும், பசளை இடாமலே நல்ல விளைவு கிடைப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். எனினும், உச்ச விளைவைப் பெறும்பொருட்டு பின்வரும் பசளைப் பிரயோகத்தை மேற்கொள்ளலாம்.

மாமரத்திற்கென சிபாரிசு செய்யப்பட்ட உரக் கலவையில் 0.5கிலோ நடுகையின் போது ஒவ்வொரு குழிக்கும் இடவேண்டும். ஒரு வருடத்தின்பின் இதே கலவையில் 0.5 கிலோ ஒவ்வொரு மரத்திற்கும் இட வேண்டும். இதன்பின் காய்க்கத் தொடங்கும் வரை ஒவ்வொரு வருடமும் 0.25 கிலோ வீதம் அதிகரித்து இட வேண்டும்.

காய்க்கத் தொடங்கிய வருடம் மரமொன்றிற்கு 1.0கிலோவும் அதன் பின்னர் 0.5 கிலோ வீதமும் ஒவ்வொரு வருடமும் அதிகரித்து ஆகக்கூடியது 4 கிலோ / மரம் / வருடம் என்ற அளவை அடையும் வரை அதிகரித்தல் வேண்டும்.

வசதிப்படுத்த நன்கு உக்கிய மாட்டெரு அல்லது கூட்டெரு 4-5 கூடைகள் இடுவது விரும்பத்தக்கது.

### பழ உற்பத்தியைத் தூண்டல் :-

சில மரங்கள் செழிப்பாகவும் வீரியமாகவும் வளர்ந்த போதிலும் காய்ப்பதில்லை அல்லது காய்ப்பது குறைவாக இருக்கும். இது பழங்கள் உண்டாகும் கிளைகளில் அதிகளவில் நைதரசன் காணப்படுவதின் காரணமாக இருக்கலாம். "பட்டையை வளையமாக வெட்டுவதன் மூலம்" இந்நைதரசன் அளவைக் குறைக்கலாம்.

இவ்வாறு செய்வதற்கு 6 - 8 அங்குலம் (15 - 20செ.மீ.) மொத்தமான கிளையைத் தெரிவு செய்தல் வேண்டும். இக்கிளை பிரதான தண்டுடன் அல்லது பெரிய கிளைகளுடன் இணையுமிடத்திற்குச் சற்று மேலாக ஒரு அங்குல அகலத்தில் கிளைகளைச் சுற்றி பட்டையை வெட்டுதல் வேண்டும்.

மாமரத்தில் மகரந்தச் சேர்க்கை, காய்கள் தோன்றல், கனி முதிர்ச்சி என்பவற்றிற்கு ஒரு திட்டவட்டமான வரட்சி தேவைப்படுகிறது. ஈரலிப்பான காலநிலை இச்செயல் முறைகளைத் தடைசெய்கிறது. எனவே, மட்டக்களப்பு மாவட்டத்திற்குப் (உலர் வலயம்) பொருத்தமான இனங்களைப் பயிரிடுதல் சிறந்ததாகும்.

### பூச்சிகளும் நோய்களும் :-

#### மாவிலைத் தத்தி :-

பெரிய மாமரங்களில் மாவிலைத் தத்தியே முக்கிய பூச்சியாகும். இந்தச் சிறிய பூச்சிகள் பூந்துணர்களையும் மெல்லிய கிளைகளையும் தாக்குவதனால் அவற்றில் உலர்தலும் சுருங்கலும் ஏற்படும். அதாவது பூக்கள் சுருங்கியும் இலைகள் சுருங்கியும் காணப்படும் இலைகளில் பூச்சிகளால் சுரக்கப்படும் வெல்லத் தன்மையுடைய கரைசலில் வளர்ந்து காணப்படும் கரிய புகைபோன்ற கருத்தாள் பூஞ்சணப் பங்கசுக்களில் இருந்து இப்பூச்சிகளின் இருக்கையை அறியலாம். இதனைக் கட்டுப்படுத்த பென்தியோன் 50%, செ.கு. 30மி.லி., 10 லீற்றர் நீரில் கலந்து மரமொன்றிற்கு மேற்குறித்த அளவில் தளிர்களுக்கும் பூக்கள் விரியும் முன் பூக்களுக்கும் விசிற வேண்டும். தேவை ஏற்படின் 14 நாட்களுக்குப் பின்னர் மீண்டும் பிரயோகிக்கவும்.

தொடரும்....

ஆக்கம் :- திரு. சண்முகம் (ஆசிரியர்),
மட்/கறுவங்கேணி விவேகானந்தா
வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சூழல் மாசுபடுவதைத் தவிர்க்க முன்மாதிரி வீட்டுத் தோட்டம் அமைத்தல்

உங்கள் குடும்பமும், சூழலும், நாடும் ஆரோக்கியமாகவும் அழகாகவும் இருக்க வேண்டுமென ஆசைப்படுகிறீர்கள் அல்லவா? அப்படியாயின் நீங்கள் செய்ய வேண்டியது என்ன?

உள்ளீடுகள் சம்பந்தப்பட்ட அளவில் வீட்டுத் தோட்டம் குறைந்தளவுத் தேவைகளை உடைய தொன்றாகலாம். இதனைச் சீர்படுத்துவதற்காக சொந்தத் தோட்டங்களில் சிறந்த நடுகைப் பொருட்களை எதிர்காலத்தில் பயன்படுத்துவதற்காக சேமிப்பதோடு மற்றவர்களிடம் இருந்து மாற்றுப்பொருளாக அல்லது கொடையாக இதனைப் பெறமுடியும்.

பொதுவாகக் குறைந்த பசளைகள் பாவனைக்குள்ளான, அதாவது போசணைகளை வழங்கும் மாட்டெரு, கூட்டெரு, வீட்டுக் கழிவுகள் முதலியவற்றைப் பயன்படுத்தி அடியுரமாக இட்டும் செயற்கை வளமாக்கிகளை மேற்கட்டுப்பசளையாக ஒரு சிலத் தாவர இனங்களுக்கு மாத்திரம் இட்டும் குறைந்த செலவில் நிறைந்த விளைவைப் பெறலாம்.

வீட்டுத் தோட்டக் காணியிலுள்ள நிரந்தர மரங்களின் விளைச்சல், அழகு போன்றவை கெடாது இருக்கவும் அதன் ஒரு சில கிளைகளைக் கத்தரிப்பதாலும் உரிய பயிர்களை அவற்றின் கீழ் திட்டமிட்டு நடுவதாலும் பயிரிடுவதற்குரிய சூரிய ஒளியுள்ள இடத்தை மீதப்படுத்துவதாலும் விளைவின் ஒரு பகுதியைத் தாம் பயன்படுத்துவதோடு எஞ்சிய காய்கறி, இலை வகைகளை விற்று மேலதிக வருவாயைப் பெருக்கமுடியும்.

வீட்டுப்பாவனையால் வரும் கழிவுநீரானது வெளியில் வீணாகச் செல்வதற்கு அமைக்கப்பட்டிருந்தால் (அதாவது வீதியில் அல்லது கழிவுநீர்க் கால்வாய்களில்) அதைத் தவிர்த்து வீட்டுப் பயிர்ச் செய்கைக்கு அந்நீரைப் பயன்படுத்துவதனால் இலாபமடையலாம்.

வீட்டுத் தோட்டத்தில் ஆண், பெண் பாகுபாடு, வயதுக்கட்டுப்பாடு ஒன்றுமில்லாது வேலை செய்யக்கூடிய வீட்டு அங்கத்தவர்கள் அனைவரும் தங்களுக்கு ஒய்வான நேரத்தில் பொழுதுபோக்காக வீட்டுத் தோட்டத்தில் ஈடுபடுவதனால் குடும்பத்தில் சந்தோஷமான வாழ்க்கையுடன் நல்ல பொழுதுபோக்காவும் அமைவதோடு வேலை உள்ளீடும் மீதப்படுத்தப்படுகிறது.

குடும்ப அங்கத்தவர்களின் எண்ணிக்கை, தேவைகளுக்கேற்ப காய்கறி, இலை வகை, பழம் போன்ற பலதரப்பட்ட பயிரினங்களைத் திட்டமிட்டுப் பயிரிடுவதனால் போசாக்கு மிகுந்த நமது அன்றாட உணவினைப் பெறவும், போதியளவு புதிய இலை வகை, பழம், கிழங்கு போன்றவைகளைப் பெறவும், மாதாந்தச் செலவைக் குறைப்பதுடன் பணத்தை மீதப்படுத்தி மாதாமாதம் சேமிக்கவும் முடியும்.

வீட்டுத் தோட்டத்தின் பிரதான அம்சம் சந்தைக்குப் போகாமல் வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்வது மட்டுமின்றி வீட்டுத் தோட்டத்தின் உற்பத்தியால் நண்பர்களுக்கும் உறவினர்களுக்கும் பகிர்ந்து கொள்வதனால் இது அவர்களுக்கும் ஒரு முன்மாதிரியாக அமைகிறது.

வீட்டுத் தோட்டங்களின் பிரதான பயிர்களில் ஒன்றான தேங்காய் இலங்கை மக்களின் சமையலில் பெரும்பங்கினை வகிக்கின்றது. எனவே, தென்னையைப் போன்ற பல்லாண்டுப் பயிரையும் ஈரப்பலா, கிழங்கு, சோளம், இறுங்கு முதலியவற்றைப் போன்ற சக்தி தரும் பயிர்களையும் நடுவதனால் அரிசி, உணவுப் பொருட்கள் குறைவான காலங்களில் இதனை உபயோகப்படுத்த முடியும்.

தொடரும்..

ஆக்கம்:- திருமதி. ந. நவரெத்தினம்,
மட்/மனைப்பொருளியல் பாட
விதான உத்தியோகத்தர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அருகிவரும் இரைசோபோரா (கண்டல்) தாவரம்

இத்தாவரம் கண்டற் தாவர சாகியங்களில் ஒன்றாகும். கண்டற் தாவர சாகியம் என்பது "கடல் சார் ஏரிகளின் கரையோரங்களிலும் ஆறும் கடலும் சந்திக்கும் பொங்கு முகங்களின் கரைகளிலும் உள்ள உப்புத்தன்மையான சேற்று நிலங்களில் வளர்ந்து காணப்படும் தாவரங்களின் கூட்டமாகும்".




இத்தாவரம் வாழும் நிலமானது அடிக்கடி வெள்ளப்பெருக்கிற்கு உட்படுவதாலும், உக்கலையும் களியையும் கொண்டு இழகியதாகக் காணப்படுவதாலும், ஒட்சிசன் பற்றாக்குறை கொண்டதாலும் இத்தாவரமானது தன்னை நிலைநிறுத்திக் கொள்வதற்கும், தன்னால் உருவாக்கப்படும் இனப்பெருக்க அலகுகளான வித்துக்களை முளைக்கச் செய்வதற்கும் விசேடமான இசைவாக்கங்களைக் கொண்டுள்ளன.

<u>நிலைநிறுத்தலுக்கான இசைவாக்கம்</u> :-


இதற்காக இதன் தண்டின் அடிப்பகுதியிலிருந்து நிலத்தினுள் ஊன்றியபடி மிண்டி வேர்கள் காணப்படுகின்றன. இவை மரத்தினை வெள்ளப்பெருக்கு, காற்று என்பவற்றிலிருந்து பாதுகாக்கின்றன.

மற்றும் இதன் பக்கக் கிளைகளில் இருந்து உருவாகி நிலத்தினுள் வேரூன்றியுள்ள தாங்கு வேர்கள் கிளைகளினதும் மரத்தினதும் ஊன்றும் பரப்பை அதிகரிக்கின்றன.

<u>வித்து முளைத்தல்</u> :-

இத்தாவரம் சீவச வித்து முளைத்தல் எனும் விசேடமான முறை மூலம் தனது வித்தினை முளைக்கச் செய்கின்றன. சீவச வித்து முளைத்தல் என்பது மரத்தில் இருக்கும்போதே வித்தானது முளைக்கத் தொடங்குதலாகும்.




இரைசோபோராவின் பழம் ஒரு தனியான வித்தினைக் கொண்டதாகும். இவ்வித்திலுள்ள முளையத்தினது வித்திலைக் கீழ்த்தண்டு பழத்தின் சுவரைத் துளைத்துக் கொண்டு கீழ் நோக்கி வளருகிறது. இவ்வித்திலைக் கீழ்த்தண்டு ஓரிரு அடிகள் நீளமானதாகவும் நுனி கூராகவும் பச்சை நிறமாகவும் காணப்படும்.

இந்நிலையில் பழமானது தாய்த்தாவரத்திலிருந்து கழன்று விழ வித்திலைக் கீழ்த்தண்டு கீழ் நோக்கி விழுந்து சேற்று மண்ணில் தனது கூரிய முனையால் ஊன்றிக் கொள்கிறது.

இப்போது வித்தானது நிலமேலாக முளைக்கத் தொடங்கும். வித்திலைக் கீழ்த்தண்டு வேரூன்றிக் கொள்கின்றது.

தொகுப்பு :- க. சத்தியானந்தன்,
சித்தாண்டி இளைஞர் கழகம்

உயிர்த்துடிப்புள்ள பூமித்தாயின்
துயர் துடைப்பது எம் கடமை

# யூகலிப்டஸ் குற்றவாளியா ?



தலைவலிக்கு மருந்து தயாரிக்கப் பயன்படும் "யூகலிப்டஸ்" மரம், உலக விஞ்ஞானிகளுக்கு தலைவலி உண்டாக்கக்கூடிய பிரச்சினையாக உருவெடுத்துள்ளது வியப்பான உண்மையாகும்!

ஆஸ்திரேலியா நாட்டைப் பிறப்பிடமாகக் கொண்ட இந்த யூகலிப்டஸ் மரமானது 600 வகைகளாகப் பிரிந்து உலகிலுள்ள 80-க்கும் மேற்பட்ட நாடுகளில் விண்ணைத் தொடும் வண்ணம் வளர்ந்து நிற்கின்றது. இம்மரங்கள் சிடு..சிடு..வென மிக வேகமாக வளரக் கூடியவை. நன்கு வளர்ந்த இம் மரங்கள் தைலம் தயாரிக்கவும் விறகுத் தட்டுப்பாட்டைப் போக்கவும் நன்கு பயன்படுகின்றன. ஒரு வகையில் பார்த்தால் இவை தங்களின் உயிரினைத் 'தீ'க்குத் தியாகம் செய்து மற்றைய மரங்களைக் காக்கின்றன என்றும் கூறலாம். இருந்தும் உலகம் முழுவதிலும் யூகலிப்டஸ் மரங்களுக்கு எதிர்ப்பு வலுத்துக் கொண்டு வருகிறது.

ஸ்பெயின் நாட்டில் இந்த எதிர்ப்பு மிக அதிகம். 'யூகலிப்டஸ் ஒழிக' எனும் தனி ஒரு இயக்கமே அங்கே உருவாகி இம்மரங்களை அழித்துக் கொண்டிருக்கிறது! இதற்கு இவர்கள் அருமையானதோர் தந்திரத்தைக் கண்டு பிடித்துள்ளார்கள். கோடாலி எடுத்து வெட்ட ஆரம்பித்தால் இவற்றை அழிப்பதற்கு அதிக நாள் பிடிக்குமென்று ஃபோரோகென்தா எனும் மரப்பட்டைகளை நீரில் ஊறவைத்து அதன் நீரை யூகலிப்டஸ் மரங்களுக்கு ஊற்றுகிறார்கள். மரம் விரைவில் பட்டுப்போய் விடுகிறது.

இந்த அளவிற்கு இம்மரங்களின் மீது வெறுப்பு வந்ததற்கு என்ன காரணம்? யூகலிப்டஸ் மரங்கள் தாங்கள் வளருவதற்காக, அக்கம் பக்கத்திலுள்ள தாவரங்களுக்குச் செல்லும் நீர்ச் சத்து மற்றும் பிற உயிர்ச் சத்துக்களைத் திருடிக் கொண்டு மற்ற தாவர இனங்களின் வளர்ச்சியினைக் குன்றச் செய்து விடுகின்றன என்று ஒரு சாராரும், யூகலிப்டஸ் மரங்கள் வெளிப்படுத்துகின்ற காற்றில் மிகுந்த நச்சுத்தன்மை உள்ளது என்று ஒரு சில நாட்டவரும், இம்மரங்கள் வளரும் பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் வெகுவாகக் கீழிறங்கி விடுகிறது என்றும், தான் வளரும் நிலப்பரப்பையே யூகலிப்டஸ் விஷமாக்கி விடுகிறது என்றும் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் இதன் மேல் சுமத்தப்படுகின்றன. 'இவையெல்லாம் நியாயமான குற்றச்சாட்டுக்கள்தானா? இதில் உண்மை உள்ளதா?' என்பதை ஆராய உலகம் முழுவதிலும் விஞ்ஞானிகள் தீவிரமாக ஆராய்ந்து வருகிறார்கள். இந்திய நாட்டில் கூட கர்னாடகாவில் ஒரு பரிசோதனைச் சாலை துவங்கப்பட்டுள்ளது. யூகலிப்டஸ் தான் நிரபராதி என்பதை நிரூபிக்குமா? பொறுத்திருந்துப் பார்ப்போம்.

ஆதாரம்: கோகுலம், ஜனவரி 1993

க. லீலா, மன்று.


வெளியீட்டுக் குழு

சுடரின் தூண்டுகோல் :-
மனோ இராஜசிங்கம்
யோ. இ. கிறிஸ்தோபர் — மன்று

நெறிப்படுத்துனர் குழு :-
ரெ. விமலா
அ. யோகராணி — மன்று
க. லீலா

ஆசிரியர் குழு :-
எஸ். சிவரூபன் - இந்துக் கல்லூரி
வி. கலைச்செல்வி - தாழங்குடா ஸ்ரீ வி.வி.
வி. முரளிதரன் - செங்கலடி ம.வி.
கே. ஜெயக்குமார் - கருதாவளை ம.வி.
க. சத்தியானந்தன் - சித்தாண்டி இ.க.
பீ. சந்திரவதி - உழைக்கும் ம.அ.நி.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலமீன்மடு ...... 2 ம் பக்கத் தொடர்.

வாகனங்களின் பதிவு இடம்பெற வேண்டுமெனவும் இதன் மூலம் போலிப்பத்திரங்களைக் காட்டி அதிகளவிலான மண் எடுக்கும் முயற்சியைக் கட்டுப்படுத்த முடியுமெனவும் அவர்களுடன் கலந்தாலோசிக்கப்பட்டது. மேலும், இது தொடர்பான விடயங்களை கிராம மக்களுடன் ஆராய்வதற்காக 13.6.93 அன்று கிராம அபிவிருத்தி சங்கக் கூட்டம் ஒன்றினை ஏற்பாடு செய்வது என்றும் முடிவு எடுக்கப்பட்டது.

இப்பிரதேசத்தில் அவதானிக்கப்பட்டுள்ள நிலைமைகளின்படி இப்போது மண் எடுக்கப்படும் பகுதிக்கு நேரெதிராகவுள்ள நாவலடி கிராமம் சார்ந்த ஆற்றுத் தொடுவாய்ப் பகுதியில் தேவையான மண்ணை எடுக்கக்கூடிய பகுதி உண்டென்பது அவதானிக்கப்பட்டுள்ளது. இப்பகுதியில் உள்ள மண்ணை எடுப்பதன் மூலம் தொடுவாய் அடைக்கப்படுகின்ற நிலைமைகளைக் கட்டுப்படுத்தக்கூடிய வாய்ப்பு உண்டென்றும் இதன் மூலம் எப்போதும் தொடுவாய்ப் பகுதி திறந்திருக்கக்கூடிய சாத்தியம் ஏற்படுவதனால் ஆற்றுப்பகுதியில் மீன் வளத்தை அதிகரிக்கக் கூடிய வாய்ப்புக்கள் அதிகமென்றும் கிராமத்தவரால் அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது.

தொடுவாய்ப் பகுதியில் காணப்படும் கட்டட வேலைக்கான மண்ணை எடுப்பதற்கு நாவலடியில் இருந்து தொடுவாய் ஈறான போக்குவரத்துப்பாதை அமைக்கப்பட வேண்டுமெனவும், இது சாத்தியமாகும் பட்சத்தில் இப்போது மண் எடுக்கப்படும் பகுதியில் இந்நிலைமைகளைக் கட்டுப்படுத்த முடியுமெனவும் அவர்களுடனான கலந்துரையாடலின்போது தெரிவிக்கப்பட்டது.

ஆக்கம் :- திரு. சி. இரத்தினம்,
மன்று.

# சுற்றாடலும் பரிணாமமும்

ஆண்வர்க்கமான நுளம்புகளும் பூச்சிகளும் ஏன், மற்றைய ஒரு கலத்தைக் கொண்ட ஜீவனிலிருந்து ஆறறிவு படைத்த மனிதன் வரை, ஆண்களே முன்னோடிகள் என்பது பின்வரும் விஞ்ஞான விளக்கங்கள் எமக்கு எடுத்தியம்புகின்றன. இதனால், ஆண் நுளம்பு வர்க்கங்களை மட்டும் நவீன விஞ்ஞான தொழில் நுட்பத்தின் மூலம் மலடாக்குவதனால் செயற்கைக் கிருமிநாசினிகளைப் பாவிப்பதின்று தவிர்ப்புகள் கடைப்பிடிக்கப்படும். பொழுது தற்போது பாவனையிலுள்ள கிருமிநாசினிகளின் பிரயோகம் குறைவடைந்து சுற்றாடல் மாசுறுவதைத் தடுக்கலாம். இவற்றிற்கான விஞ்ஞான விளக்கம் :-

நுளம்புகள் தரும் பாடம் ஆறறிவு படைத்த மனிதனைச் சிந்திக்கத் தூண்டுகிறது. எப்படியெனில், அனோபிலஸ் நுளம்புகளுக்குத்தான் இறகுகளில் புள்ளிகள் இருக்கின்றன. ஆனால், கியூலெக்ஸ் எனும் நுளம்புகளின் இறகுகளில் புள்ளிகள் இருப்பதில்லை. இது மரபு. ஆனால், தற்போது கியூலெக்ஸ் நுளம்புகளின் ஒரு சில வர்க்கத்தின் இறகுகளிலும் புள்ளிகள் ஏற்பட்டுள்ளன. இது எதனைக் குறிக்கின்றது என்றால், அனோபிலஸ் ஆண் நுளம்பு, கியூலெக்ஸ் பெண் நுளம்புகளுடன் புணர்வதனால் ஏற்படும் பரிணாம வளர்ச்சியின் எச்சமாகும். இதனையே, பரிணாம மேதை டார்வினின் குரங்கிலிருந்து பிறந்தவன் மனிதன் எனும் கோட்பாட்டுடன் தொடர்புபடுத்தக்கூடியதாகவுள்ளது.

இத்தேற்றத்தின் வெளிப்பாட்டையே கலிபோர்னியா, சர்வகலாசாலையின் ஒரு உளவியல் பேராசிரியர் தனது ஆய்வின் மூலம் ஒரு கலஜீவனிலிருந்து பரிணாம வளர்ச்சியடைந்த குரங்கின் நிலையிலிருந்து மனிதன் தோன்றியது உண்மையென்றும், மேற்கூறிய பரிணாம வளர்ச்சிக்கு ஒப்புமைகளையும் சமர்ப்பித்துள்ளார். எனவே, கிருமிநாசினிகளும், ரேடியோ கதிரியக்க முறைகளும் சிற்றுயிர்களை பரிணாம வளர்ச்சிக்குட்படுத்தி மேலும், சுற்றாடலில்

தொடர்ச்சி...10

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சூழற் பாதுகாப்பில் சமூகக் காடு வளர்ப்பு

இன்று நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளுள் சூழல் பாதுகாப்பு என்பது முக்கியமானதொன்றாகும். சூழல் எவ்வகையில் பாதிக்கப்படுகின்றது? அதன் தாக்கங்கள் என்ன? இவற்றைத் தடுப்பதற்கான திட்டங்கள், செயற்பாடுகள் என்ன? என்பவற்றை மக்கள் ஒவ்வொருவரும் சிந்தித்துச் செயற்பட வேண்டும்.

இன்று நம் நாட்டு நிலமையைப் பொறுத்தவரை காட்டுவளம் மிக முக்கியமானதும் மக்களுடன் நெருங்கிய தொடர்புடையதுமாகும். முன்பு 75% காட்டுவளங்களைக் கொண்ட நம் நாட்டில் தற்போது 24%தான் பெருந்தோட்டங்கள் உட்பட உள்ளன. என்று ஆய்வாளர்கள் கணித்துள்ளார்கள். இந்நிலை தொடர்ந்தால் சமநிலை சீர்குலைவிற்கும், சூழல் பாதுகாப்பிற்கும் காரணம் நாமாகத்தான் இருக்க முடியும். இக் காட்டுவளத்தின் முக்கியத்துவத்தை நாம்தான் பேணிப் பாதுகாக்க வேண்டும். எம் சமூகத்திற்குத் தேவையான காடுகளை பெருமளவில் அழிப்பதால் நிலத்தின் தரம் அழிகிறது. பிராணவாயு குறைந்து கரியமிலவாயு அதிகரிக்கிறது. மழை குறைந்து மண்ணரிப்பு ஏற்படுகின்றது. இப்படியான சூழல் தாக்கங்களிலிருந்து நம்மை, நம் வருங்காலச் சமூகத்தினைக் காக்கக் காடுகளை அழிக்காமலும், அழிந்த இடங்களில் மீள் நடுகைத் திட்டத்தினை உருவாக்கியும் பாதுகாக்க வேண்டும்.

இத்திட்டங்களில் சமூகக்காடு வளர்ப்புத்திட்டம் மிக முக்கியமானதொன்றாகும். உதாரணமாக இத் திட்டத்தில் சீனா, வடகொரியா, தென்கொரியா, தாய்லாந்து போன்ற நாடுகள் பெரும் வெற்றி கண்டுள்ளன. வீதி ஓரங்கள், வீட்டுத்தோட்ட வேலிகள், கிராமத்தின் எல்லைப் பகுதிகள், பொது இடங்கள் ஆகிய இடங்களில் மரநடுகை மேற்குறிப்பிட்ட நாடுகளை அழகிய மரச்சோலைகளாக மாற்றியுள்ளன. இத்திட்டத்தில் குழந்தைகள் முதல் வயதுமுதிர்ந்தோர் வரை பங்கு கொண்டார்கள். இத்திட்டத்தில் நாட்டுப்புற மக்கள் பெரும்பலன்கள் பெற்றதோடு சுற்றுச் சூழலுடனும் தம்மைச் சூழவுள்ள காடுகளோடும் ஒற்றுமையாகத் தம் வாழ்க்கையை அமைத்துக் கொண்டார்கள். இத்திட்டத்தில் இந்த நாடுகள் அடைந்த முன்னேற்றம் அளப்பரியதாகும்.

இச் சமூகக்காடு வளர்ப்புத்திட்டத்தை எமது கிராமப்புறங்கள், நகர், நாடு முழுவதிலும் மேற்கொள்ள வேண்டும். இதனால், சூழல் பாதுகாக்கப்படுவதுடன் மக்கள் தம் சுய தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியும். ஒவ்வொரு கிராம மக்களும் அங்குள்ள சமூக சேவை நிறுவனங்கள், கழகங்கள், கிராமோதய சபைகள் என்பவற்றின் உதவியுடன் தம் கிராமங்களிலுள்ள பொது இடங்கள், பயிர்ச் செய்கைக்குப் பயன்படாத நிலங்கள், வீதியோரங்கள், கோயில் வளாகங்கள், பாடசாலை வளாகங்கள், சதுப்புநிலப்பகுதிகள் போன்ற இடங்களில் பயன்தரும் மரங்களை உருவாக்குவதன் மூலம் சமூகக்காடு வளர்ப்பை மக்கள் மயப்படுத்தலாம். காடழிப்பினைத் தவிர்த்து ஒவ்வொரு கிராம மக்களும் ஐந்து ஏக்கரிலாவது மேற்கொண்டால் விறகுத்தேவை, தளபாடத்தேவை மற்றும் பல சுய தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளமுடியும். இதில் முக்கியமாக அரசு, அரச சார்பற்ற நிறுவனங்கள், திணைக்களங்கள் ஆகியவற்றின் உதவிகளுடன் செயற்படுவதன் மூலம் சூழல் பாதுகாகாக்கப்படுவதுடன், சமூகக் காடு வளர்ப்புத் திட்டத்தில் பூரண வெற்றியும் அடையலாம் என்பதில் ஐயமில்லை.

ஆக்கம்:- திருமதி. தே. தயாபரன்,
சமூக அமைப்பாளர், மன்று.

---

சுற்றாடலும் ... 9ம்பக்கத் தொடர் .....

வீரியம் உள்ளவைகளாகவும், விவேகம் உள்ளவைகளாகவும் உயிரியலின் மூலம் சுற்றாடல் சூழலின் மாற்றத்திற்கேற்றவாறு தம்மை மாற்றிக்கொள்கின்றன என்பதனை நாம் அறிந்துகொள்ளக் கூடியதாகவிருக்கின்றது.

ஆக்கம்:- திரு. இரா. பொன்மயில்,
மட்/மலேரியாத் தடுப்புப்
பிரச்சாரப் பகுதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக சூழல் தினக் கருத்தரங்கு பற்றிய அறிக்கை

05.06.1993 அன்று வின்சன்ற் மகளிர் உயர் தரப் பாடசாலையில் கிராமோதய சபைத் தலைவர்கட்கு உலக சூழல் தினத்தை முன்னிட்டு சூழல் கருத்தரங்கு ஒன்று நடாத்தப்பட்டது.

ஆரம்ப நிகழ்ச்சியாக பெரி அரங்கில் அர சாங்க அதிபர் திரு.ஆர்.மோனகுருசாமி அவர் களின் தலைமையில் காலை 9.00 மணியளவில் மரநாட்டு விழா நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அரசாங்க அதிபருக்கு மாலை அணிவிக் கப்பட்டதை அடுத்து மங்கள விளக்கேற்றலும் இடம் பெற்றது. இதில் உள்ளூராட்சித் திணைக் கள உத்தியோகத்தர்களும், மாவட்ட வன பரி பாலன உத்தியோகத்தரும், விவசாயப் பிரதிப் பணிப்பாளரும், நீர்ப்பாசன உதவிப் பணிப்பாள ரும், கிராமோதய சபைத் தலைவர்களும், நண்பர்கள் உலக உறுப்பினர்களும், சித்தாண்டி இளைஞர் கழக உறுப்பினர்களும், எமது மன்று உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

அடுத்து தலைமையுரையாற்றிய மாவட்ட சூழல் முகவரவைச் செயலாளரும், பிராந்திய உள்ளூ ராட்சி உதவி ஆணையாளருமாகிய திரு.செ.புண் ணியமூர்த்தி அவர்கள் "வறுமையும் சூழலும்" என் னும் தலைப்பில் உரையாற்றினார். இவர் சுற் றாடல் மாசடைவதற்கு முக்கிய காரணி மக்களி டம் ஒன்றிப்பிணைந்திருக்கும் வறுமையாகும் எனக் கூறியதுடன், பொருளாதார நெருக்கடியை ஓர ளவேனும் நிவர்த்தி செய்தால் சூழலைப் பாது காக்க முடியுமெனவும் கூறினார். அத்துடன், மரநடுகையையும் அதற்கு வேண்டிய முக்கியத் தேவையான சமூகத்தின் பங்களிப்பையும் வலியு றுத்தினார்.

இவரைத் தொடர்ந்து உரையாற்றிய மன்று நிறு வன பிரதித் தலைவர் திரு.மனோ இராஜசிங் கம் அவர்கள், மட்டக்களப்பு வாவியின் முக்கி யத்துவம் பற்றியும், வாவிக்கரையிலுள்ள சதுப்பு நிலப்பிரயோகம் பற்றியும், எமக்குக் கிடைத் துள்ள மிகப் பெரிய செல்வங்களான வளங்க ளினை எவ்வாறு பாதுகாப்பது என்பது பற்றி யும், அவற்றினது பயன்பாடுகள் பற்றியும் கூறி யதுடன், மன்று நிறுவனம் நடத்தும் ஆய்வு வேலைகள் சம்பந்தமான விபரங்களையும் விளக்கிக் கூறினார். இவ்வாய்வுகளின்படி, நீரும், நீருடன் தொடர்புள்ள கண்டல் நிலத் தாவரங்களின் அழிவுகளினாலேற்படும் விளைவு கள் பற்றியும் விளக்கிக் கூறினார். இதிலி ருந்து 20 - 25 வருடங்களளவில் மீனினங்கள் முற்றாக அற்றுப்போகக்கூடிய நிலைமையும் உருவாகலாமென ஆய்வுத்தரவுகளை அடிப்படை யாக வைத்துக் கூறினார்.

"புறச்சூழல் நன்றாக இருக்க வேண்டுமாயின் அகச்சூழல் நன்றாக இருக்க வேண்டும்" ஆம் மக்களின் மனதில் சூழல் பற்றிய ஒரு விழிப்பு ணர்ச்சி இருந்தாலன்றி எம் சுற்றுப்புறச் சூழ லினை நாம் பேண முடியாது. இது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட அரசாங்க அதிபர் அவர்களின் உரையாக அமைந்தது. இவரது உரையில் சூழல் முகவரவையின் செயற்பாட்டிற்கு என்றும் உறுதுணையாக இருக்கும் ஒரேயொரு நிறுவனம் "மன்று" எனவும் கூறினார்.

கருத்தரங்கை சிறப்பிக்கும் நிகழ்ச்சிகளான கருத்துக்களை வழங்கும் வைபவங்கள் அடுத்து இடம்பெற்றன. முதலாவதாக, மாவட்ட வன பரிபாலன உத்தியோகத்தரான திரு.வி.சதாசிவம் அவர்களால் "சமூகக்காடு வளர்ப்பும் சூழல் பாதுகாப்பும்" பற்றி கருத் துரை வழங்கப்பட்டது. இவர் உலக சூழல் பிரச்சினையையும், முக்கியமாக இலங்கையில் ஏற்பட்டுள்ள சூழல் பிரச்சினை பற்றியும் கூறி னார். "இன்று வனங்களை அழிப்பதும் மனி தன் அதன் பாதிப்பைப் பெறுவதும் மனிதனே" என்னும் கருத்தை எடுத்துக் கூறினார்.

தொடர்ச்சி..12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலக சூழல் தினக் கருத்தரங்கு..... 11ம் பக்கத் தொடர்ச்சி

இன்று காடழிப்பினால் வளிமண்டலத்திலிருந்து வரும் நச்சு வாயுக்கள் நேரடியாக உயிர்களைத் தாக்கும் நிலை, அரும்பு விட்டுக் கொண்டிருக்கின்றது. காடழிப்புத் தாக்கங்களினால் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தினால் இன்று 100%மான உயிரினங்கள் இறப்பை எதிர்கொள்கின்றன. அத்துடன், இலங்கையிலிருந்த காடுகளில், இன்று 24%மான காடுகளே அழிவுக்குட்படுத்தப்படாமல் இருக்கின்றன. இக்காடுகளுள் பெருந்தோட்டங்களும் உட்படுகின்றன என்னும் கவலைக்குரிய விடயத்தை எடுத்துக் கூறினார். இவற்றுடன் மீள் நடுகைத் திட்டத்தையும் வலியுறுத்தினார்.

விவசாயப் பிரதிப் பணிப்பாளரான திரு.ரி.கனகசபை அவர்கள், "வளங்களைப் பயன்படுத்தும் வேளையில் சூழலை எவ்வாறு பாதுகாக்க முடியுமென்பது" பற்றிக் கூறினார். பயிர்ச்செய்கையின் போது கையாளப்படும் நவீன முறைகளைத் தவிர்த்து மனித சக்தியையும், இயற்கைப் பசளைப் பிரயோகத்தையும் மேற்கொள்ளும் முறை பற்றியும் மிக அழகாகவும் எளிய நடையிலும் எடுத்துக் கூறினார். அத்துடன், நவீன கிருமி நாசினிகள், பசளைப் பிரயோகம் முதலியவற்றால் சூழல் மாசடைகின்றன என்பதனைத் தெளிவுபடுத்தியதுடன் நவீன கிருமிநாசிகளுக்குப் பதிலாக வேப்பம் விதையைப் பயன்படுத்தும் நல்ல முறை பற்றியும் எடுத்துக் கூறினார். அத்துடன் மரநடுகை முறையையும், மரநடுகையின் பயன்கள் பற்றியும் கூறினார்.

"சூழல் பாதுகாப்பும் மக்களின் பங்களிப்பும்" பற்றி நீர்ப்பாசன உதவிப் பணிப்பாளர் திரு.ஏ.எஸ்.மனோகரதாஸ் அவர்கள் எடுத்துக் கூறினார். இயற்கை அழிவிற்குக் காரணம் மனிதனே என்னும் முக்கியக் கருத்தை விளக்கினார். அத்துடன், இயற்கை அழிவை ஓரளவேனும் நிவர்த்தி செய்ய மாற்று நடவடிக்கைகளை மேற்கொள்வது பற்றிக் கூறினார். இதற்கு உதாரணமாக "மூன்று கல் விறகடுப்பினால்" 70%மான வெப்பம் வீணாக விரயமாக்கப்படுவதாகவும், அதைத் தவிர்ப்பதற்கும் விறகுச் செலவைக் குறைப்பதற்குமாக "சிக்கன விறகடுப்பு" பற்றியும் கூறினார். மேலும், யூகலிப்டஸ் (விசில்) மரத்தின் பயன்பாடு பற்றியும் கூறினார்.

அதைத் தொடர்ந்து குழுக்களிடையே செயலமர்வு இடம்பெற்றது. இது நான்கு குழுக்களாகப் பிரிக்கப்பட்டு நடத்தப்பட்டது. முக்கிய விடயமாக வளங்களும் கிராமோதயத் தலைவர்களின் பங்களிப்பும் பற்றி ஆராயப்பட்டது. இக்குழுக்களால் சமர்ப்பிக்கப்பட்ட அறிக்கைகளில் கட்டுப்பசளை, வீதியோரங்களில் குப்பைகளைக் கொட்டுதல், வீட்டுத் தோட்டப் போட்டி, வீட்டிற்கொரு மரக்கன்று (பிறப்பு அல்லது இறப்பு மற்றும் விசேட நிகழ்ச்சிகள்) நடுதல், கடற்கரை ஓரங்களில் மண் எடுப்பதைத் தடுத்தல் போன்ற விடயங்கள் முக்கியமானவைகளாக அடங்கியிருந்தன.

சமூக அபிவிருத்தி உத்தியோகத்தரான திரு.முருகமூர்த்தி, கிராமோதய சபைத் தலைவர்களின் சார்பில் ஒரு தலைவர், மன்று நிறுவன இணைப்பாளர் திரு.யோ.இ.கிறிஸ்தோபர் ஆகியோரால் நன்றியுரை வழங்கப்பட்டது. நிகழ்ச்சியின் ஞாபகார்த்தமாக நீர்ப்பாசன உதவிப் பணிப்பாளர் திரு.ஏ.ஈ.மனோகரதாஸ் அவர்களால் அனைவருக்கும் பப்பாசிக்கன்றுகள் வழங்கப்பட்டு நிகழ்ச்சி இனிதே நிறைவேறியது.

தகவல் :- திருமதி. கு. கிறிஸ்ரோபர்,
திருமதி. தே. தயாபரன்,
திருமதி. சி. இரத்தினம்,
செல்வி. அ. யோகராணி.

# தொடர்புகள்

* திரு. ஐ. எம். ஏ. காதர்,
உறூதா வீதி,
வாழைச்சேனை.

தாங்கள் அனுப்பிய சித்திரை மாத "சூழல் சுடர்" கிடைக்கப் பெற்றேன். அளவற்ற மகிழ்ச்சியடைந்தேன், சிரமம் பாராது அனுப்பியதற்கு ஆயிரம் நன்றிகள்.

ஒவ்வொரு மாதமும் தவறாது எனக்குக் கிடைக்க ஆவன செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றேன். அத்தோடு கவிதைச் சுடரில் "வீட்டுக்கொரு மரக்கன்று" என்ற கவிதை இவ்விதழுக்கு மேலும் மெருகூட்டியது. கவிதை எழுதிய பொ. பேரின்பம் அவர்களுக்கு எனது மனப்பூர்வமான வாழ்த்துக்கள்.

* திரு. ஆ. செங்காசலம் ஜே.பி.,
கிராமோதய சபைத் தலைவர்,
மகிழூர் கிழக்கு, களுவாஞ்சிக்குடி.

"சூழல் சுடர்" சித்திரை இதழ் கிடைக்கப் பெற்றேன்!. மிக்க நன்றி. இதனைத் தொடர்ந்தும் பெற விரும்புகின்றேன். விபரங்களைத் தந்துதவுமாறு வேண்டுகிறேன்.

மன்றுவின் பணி என்றும் தொடர்ந்திட
சூழல் சுடர் என்றும் தொடர்ந்திட
மாதம் ஓர்முறை விரித்திடு இதழை
மக்கள் உள்ளம் நன்றே வளம்பெற
வந்தே எமக்கு ஆற்றிடு இப்பணியை.

* திரு. கே. தங்கராசா,
அதிபர்,
மட்/தாழங்குடா றோ.க.த.க.பா.,

தங்கள் நிறுவனத்தால் எங்கள் பாடசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்ட "சூழல் சுடரைப்" பார்த்தோம். பயனுள்ள பல விடயங்களைக் கண்டு மகிழ்ச்சியடைவதோடு எங்கள் பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம். உங்கள் பணி மேலும் தொடர இறைவனின் ஆசியை வேண்டுவதுடன் தொடர்ந்தும் எமக்கு "சூழல் சுடரை" அனுப்புமாறு வேண்டுகின்றோம்.

* செல்வன். ச. மதியழகன்,
செல்வன். சோ. ஜெயக்கொடி, (மாணவர்கள்)
மட்/நாவலடி நாமகள் வித்தியாலயம்,
நாவலடி, மட்டக்களப்பு.

தங்களது "சூழல் சுடர்" அணியில் எங்களையும் சேர்த்துக் கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்வதுடன், தங்களது மாதாந்த வெளியீட்டினையும் தொடர்ந்து அனுப்புமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

* திரு. த. சவுந்தரராசன்,
தலைவர்,
அண்ணா சனசமூக நிலையம்,
மண்டூர்.

என் கரம் கிடைக்கப்பெற்ற உங்கள் "சூழல் சுடர்" பத்திரிகையை வாசித்தவுடன் நானும் உங்களுடன் ஒருவனாக சேர்ந்து சேவை செய்ய வேண்டுமெனத் தோன்றுகின்றது. உங்கள் பணி மிகவும் போற்றத்தக்க விடயம். எங்கள் ஊரில் எந்தவிதமான கன்று உற்பத்தியும் இல்லை. எனவே, இயற்கையைப் பாதுகாக்கும் பொருட்டு மரக்கன்றுகளைத் தந்துதவுமாறு கேட்டுக் கொள்வதுடன், எமது மன்றத்திற்காகவும், மக்களுக்காகவும் தங்களது "சூழல் சுடர்" மாத வெளியீட்டினை ஒவ்வொரு மாதமும் எமக்கு அனுப்பி வைக்குமாறு எமது மன்றத்தின் சார்பாக கேட்டுக் கொள்கின்றேன்.

* திரு. பீ. சுந்தரலிங்கம்,
முகாமையாளர்,
பொதுஜன அபிவிருத்தி மன்றம்,
சித்தாண்டி.

தங்களால் மாதாந்தம் வெளியிடப்படும் "சூழல் சுடர்" புத்தகத்தை வாசிப்பதன்மூலம் நாமும் எமது மன்றத்தினரும் சூழல் பற்றிய பல அறிந்திராத விடயங்களை அறிந்து கொண்டோம். அத்தோடு இவ்விதழை தொடர்ந்து வெளியிடுவதன் மூலம் எமது சூழல் பாதுகாக்கப்படுவதுடன் சூழல் பற்றிய விடயங்களை எமது மக்களுக்கும் உணர்த்த முடியுமென எதிர்பார்ப்பதோடு இதனை எமக்குத் தொடர்ந்து அனுப்பக் கோருகிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திச் சுடர்

* மண்காப்புத் தினத்தை நினைவு கூருமுகமாக மன்று, காங்கேயனோடைக் கிராமத்தில் வாவிக்கரையோரங்களில் நாட்டிய கண்ணாக்கன்றுகளுடன் மேலும் 300 கன்றுகளை அப்பகுதியில் நாட்டியுள்ளது.

***********

* 1993.06.05 அன்று மட்/வின்சன்ற் மகளிர் உயர்தரப் பாடசாலையில் உலக சூழல் தினத்தை முன்னிட்டு, கிராமோதய சபைத் தலைவர்களுக்கு கருத்தரங்கு வழங்கப்பட்டது. இது காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடாத்தப்பட்டது. கருத்தரங்கு பற்றிய விரிவான அறிக்கை உள்ளே கொடுக்கப்பட்டுள்ளது.

***********

* உலக சூழல் மாசடைவும், இலங்கைச் சூழல் மாசடைவும் பற்றி எமது நிறுவன ஆய்வாளர்களுக்கும், சமூக ஒழுங்குபடுத்துனர்களுக்கும், சேவையாளர்களுக்கும் படக்காட்சி மூலம் அறிவூட்டலும், கலந்துரையாடலும் 26.5.93 அன்று மன்று நிறுவன கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

***********

* 18.5.93 அன்று மாவட்ட சூழல் முகவரவைக் கூட்டம் கச்சேரியில் நடாத்தப்பட்டது. இதில் எம் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். பூந்தோட்டமும், பூங்காவும் அமைத்தல், குப்பைத் தொட்டிகள் அமைத்தல், உலக சூழல் தின நிகழ்ச்சிகள், மண் அரிதல், சூழல் பாதுகாப்புக் கலாச்சார நிகழ்ச்சிகள், சூழல் அணி, ஒலியால் மாசடைதல் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டன. பாடசாலையில் சூழல் அணிகளை உருவாக்குவது சம்பந்தமாக கல்விப் பணிப்பாளர், சூழல் முகவர் நிலையச் செயலாளர், மன்று இணைப்பாளர் ஆகிய மூவரடங்கிய குழு இது பற்றிய நடவடிக்கைகளை எடுப்பதெனத் தெரிவிக்கப்பட்டது.

************

* ஒவ்வொரு பாடசாலைகளிலும் "மாணவர் சூழல் அணி"யினை உருவாக்குவது சம்பந்தமான நடவடிக்கைகளுக்காக சமூக ஒழுங்குபடுத்துனர்கள் பாடசாலைகளுடன் தொடர்புகளை மேற்கொள்கின்றனர்.

***********

உங்கள் கவனத்திற்கு :-

"சூழல் சுடர்" ஒரு மாதாந்த வெளியீடு.
இதனைத் தொடர்ந்து பெற விரும்புவோர்
எம்முடன் தொடர்பு கொள்ளவும்.

"சூழல் சுடர்",
மன்று,
43, புகையிரத நிலையக் குறுக்கு வீதி,
மட்டக்களப்பு.

To,
Mr. K. Shanmugam (Teacher)
Naduvilthambi Lane,
Vantharumoolai.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org